உ

சிவமயம்

திருவிற்குடித் தல வரலாறு

திருவிற்குடி 1991

உ

சிவமயம்

திருவிற்குடித் தல வரலாறு

*

திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
வித்வான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களின்
நூலின் துணைக்கொண்டு தொகுத்தவர்

பள்ளத்தூர் பழ. அண்ணாமலை

*

பள்ளத்தூர் சொ. மு. அ. குடும்பத்தினரால்
திருவிற்குடி அருள்மிகு பரிமள நாயகி உடனுறை
வீரட்டானேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தை
முன்னிட்டு வெளியிடப்பெற்றது.

*

1991

முன்னுரை

மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் பல்வேறு காலக் கட்டங்களில் அமைக்கப்பெற்ற ஆலயங்கள் பல. அவைகள் பிற்காலத்தில் பராமரிப்புக் குறைவால் பழுதுபட்டுவிட்டன. இங்ஙனம் பழுதுபட்ட ஆலயங்கள் பலவற்றைப் புதுப்பித்தும், புதிதாகப் பல ஆலயங்களைத் தோற்றுவித்தும் புகழ் பெற்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர்.

இப்படிப்பட்ட பழமையான திருத்தலங்களுள் ஒன்று விற்குடி. இது சோழ நாட்டில், காவிரி ஆற்றின் தென்கரையில் உள்ளது. ஜலந்தரன் என்ற அசுரனை வதம் செய்யப்பட்ட இடமென்றும், அவ்வாறு ஜலந்தரன் வதையுண்ட போது திருமாலின் வில் கீழே விழுந்த இடமானதால் வில்குடி என்று பெயர் பெற்று, நாளடைவில் மருவி விற்குடி ஆயிற்று.

இந்த விற்குடியில் கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் அருள்மிகு பரிமளநாயகி உடனுறை வீரட்டானேஸ்வரர் ஆலயத்தை புதுப்பித்த திருப்பணியைச் செய்தவர்கள் பள்ளத்தூர் சொ. மு. அ. குடும்பத்தினர். அறுபது ஆண்டுகளுக்குப் பின் இப்போது மீண்டும் அந்தக் குடும்பத்தினரின் இன்றைய வாரிசுகள், மறுபடி சுதை வேலைகள் செய்து, வர்ணம் பூசி, மருந்து சாத்தி கும்பாபிஷேகம் செய்கிறார்கள். அதனை முன்னிட்டு விற்குடித் தல வரலாறு எழுதும் பொறுப்பினை என்னிடம் தந்தார்கள். புராண இதிகாசங்களிலும் இலக்கியத்திலும் தேர்ச்சி பெறாத என்னை அணுகியபோது, இதுவும் இறைவன் செயல் என ஒப்புக்கொண்டேன். திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமை தமிழாசிரியர் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களின் நூல் எனக்குப் பேருதவியாக அமைந்தது.

நூல் எழுதப் பணித்த பள்ளத்தூர் சொ. மு. அ. குடும்பத்தினர்க்கும் நல்ல முறையில் அச்சேற்றி உருவாக்கித் தந்த சென்னை ராமார் கார்ப்பொரேஷன் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

அன்புடன்,

பழ. அண்ணாமலை



அட்டவீரட்டம்

அட்டவீரட்டம்

உ

சிவமயம்

அட்ட வீரட்டம்

''பூமன் சிரம்கண்டி, அந்தகன் கோவல், புரம்மதிகை,
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மா வழுவூர்
காமன் குறுக்கை, யமன்கடவூர், இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.''

சிவபெருமான் வீரச்செயல்கள் புரிந்த எட்டுத் தலங்கள்

1. திருக்கண்டியூர் : ஐந்துமுகம் கொண்ட பிரமனது ஒரு சிரத்தை நகத்தால் கொய்த இடம்

2. திருக்கோவலூர் : ஆணவம் கொண்டு வந்த அந்தகாசுரனை அழித்த இடம்

3. திருவதிகை : திரிபுர அசுரார்களின் மூன்று கோட்டைகளையும் அழித்த இடம்

4. திருப்பறியலூர் : தன்னை அவமதித்த தக்கனை வீரபத்திரரால் கண்டித்து ஆட்டுத் தலையை அவனுக்கு அளித்த இடம்

5. திருவிற்குடி : சலந்தரன் என்ற அசுரனைச் சக்கரத்தால் பிளந்த இடம்

6. திருவழுவூர் : யானை உருவத்தோடு வந்த அரக்கனை அழித்துத் தோலைப் போர்த்திய இடம்

7. திருக்குறுக்கை : காமனைக் கண்நெருப்பால் காய்ந்த இடம்

8. திருக்கடவூர் : மார்க்கண்டேயனுக்காக யமனைக் காலால் உதைந்து அழித்த இடம்

உ
சிவமயம்

திருவிற்குடித் தல வரலாறு

செல்வ விநாயகர் துதி

திருமலியும் விற்குடியிற் சேர்ந்துபணி அன்பருள்ளம்
ஒருமையுட னின்பமுற உலகினிட்ட சித்திதரும்
ஒருபிரண வப்பொருளா வோங்குசித்தி புத்தியர்கள்
மருவுசெல்வ விநாயகனை வணங்கியடி வாழ்த்துவமே

சுப்பிரமணியர் துதி

வில்லோங்கு விற்குடி வாழ்வீரட்ட நாதரிடத்
தில்லோங்கு மேலவார்குழ லன்னை யீன்றருளுங்
கல்லோங்க லார்குமரன் கயவல்லி மான்மகள்சேர்
மல்லோங்கு திண்புயத்தெம் வடிவேல னடிபோற்றி

வீரட்டேசுரர் துதி

திருவும்உரை மகளும்நிறை செம்பொன் மணிமாடம்
மருவும் ஒரு திருவிற்குடி வளமுற்றிடு தலியின்
வருவாரருள் பெறவேதரு வயவீரட்ட நாதன்
இருதாண்மல ரெணிநா மலர்இட்டுப் பணிவோமே

ஏலவார்குழல் அம்பாள் துதி

கங்கையா ராறுகு கொன்றைகூ விளமுங்
கவின்றரு தும்மைகா ரரவுந்
திங்களு மணிந்து திருவருள் புரியும்
விற்குடி வீரட்டம் திகழும்
சங்கரநாம வீரட்ட நாதன்
தனக்கொரு பாகத்தி லமர்ந்து
மங்கள நல்கு மைலவார் குழலி
மலரடி யனுதினம் பணிவேம்

பிருந்தா லிங்கமெனும் திருமயான ஈசுவரர் துதி

பெருமைசேர் விற்குடியில் பேசுதிரு
மெய்ஞான சுவாமி யென்னுந்
தருவைநிக ரெம்பெருமான் சலந்தரன் வீ
ழிடத்தொளிருஞ் சம்பு நாதன்
கருவையுறு தடியவர்க டனையடையக்
காதலுட னருளு மூர்த்தி
குருவைநேர் கொண்டிலகும் பிருந்தைலிங்கப்
பெருமானைக் கூடி வாழ்வோம்

தலம் :

எல்லா வளங்களும் மலிந்துகிடக்கும் எழில்மிகு சோழ நாட்டில் மழைவளம் சுருங்கினும் மணிநீர் வளம் பெருக்கிப் பல கால்களாய்ப் பாய்வது காவிரி ஆறு. இந்தக் காவிரியின் இருகரைகளிலும் ஏற்றமுடன் விளங்கும் சிவத்தலங்கள் பலப்பல. இதன் காரணமாகவே ''தென்னாடுடைய சிவனே போற்றி'', ''மாதவம் செய்த தென் திசை'' என்ற மணிமொழிகள் எல்லாம் பிறந்தன.

தமிழகத்தில் உள்ள ஊர்கள் பலவற்றுள்ளும் அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவராலும் பாடப்பெற்றவை 274 தலங்கள் என தமிழ் நூல்கள் மூலம் அறிய முடிகிறது. இந்த 274 தலங்களில் மூவராலும் பாடப்பெற்றுச் சோழ நாட்டில் இருக்கக்கூடிய தலங்கள் 190 எனவும் அறிய முடிகிறது. காவிரி ஆற்றின் வடகரையில் உள்ள தலங்கள் 63. தென் கரையில் அமைந்துள்ள தலங்கள் 127. இவற்றைப் பார்க்கும் போது சோழ நாட்டின் பெருமையை எழுத்தில் அடக்குவது கடினம்.

காவிரி ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ள தலங்களில் ஒன்று திருவிற்குடி. தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுகாவில் அமைந்துள்ள ஒரு இயற்கை எழில்வாய்ந்த தலம். இந்தக் காலத்துக் கவிஞன் ஒருவன்.

பூவிடை ஒழுகி ஓடும்
　　புதுமது வயலிற் பாயக்
காவிடைக் குயில்கள் பாடக்
　　களிகொள மயில்கள் ஆடக்
கோவிலும் குளம் கஞ்சக்
　　குறுநகை பொங்கித் தவழும்
தேவியின் அருளில் ஓங்கித்
　　திகழும் நற்விற் குடியே

என்று பாடி மகிழ்வதை இங்கு உற்றுநோக்க வேண்டும். மாயவரம் காரைக்குடி புகைவண்டிப் பாதையில் உள்ள திருவாரூர் நிலையத்திற்கு வடக்கே சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்த விற்குடி புகைவண்டி நிலையம். இந்த நிலையத்திலிருந்து கிழக்கே நாகூர் நோக்கிச் செல்லும் சாலையில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்யாணி இருப்பு என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் சாலையில் அமைந்துள்ளது இந்தத் தலம்.

தீர்த்தம் :

இந்தத் திருவிற்குடித் தலத்திலிருந்து தென்மேற்கே உள்ள விளைப்பாற்றுப் பாலத்தைக் கடந்து ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்தத் தலத்தின் தீர்த்தமான **சங்க தீர்த்தம்.**

மூர்த்தி :

இந்தத் தீர்த்தத்தின் கிழக்கே, மேற்கு நோக்கி அமைந்துள்ள ஆலயத்தில் வீற்றிருந்து அருள் பாலித்து வருகிறார் **வீரட்டானேஸ்வரர்**

இந்தத் **தலம், தீர்த்தம், மூர்த்தி** ஆகிய மூன்றையும் விரிவாகப் பார்த்தால் திருவிற்குடியின் தலவரலாறு நமக்கு எளிதில் புரிந்துவிடும்.

இயற்கை அமைப்பு :

இயற்கை வளமிக்க எழில்மிகு இடங்களிலேயே இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கின்றான். திருமுருகாற்றுப் படையில்

''காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்''

ஆகிய இடங்களில் சென்று மனமுருகி வழிபடுவார்க்கு முருகன் காட்சிதருகிறான் என்று நக்கீரர் கூறுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் பல பெரியவர்கள் கூட மலை, வனம், போன்ற இயற்கை எழில்மிக்க இடங்களுக்கே சென்று தவநெறியைக் கைக்கொண்டார் என்றும் நாம் அறிகிறோம், இறைவனும் அருவுருவத் திருமேனி கொண்டு அன்பர்கள் உய்யும் வண்ணம் இயற்கை வனப்பு நிரம்பிய இடங்களிலேயே திருக்கோயில் கொண்டு அருள் பாலித்து வருகிறார்.



ஸ்ரீ வீரட்டான ஈஸ்வரர்

பரிமள நாயகி
என்ற
ஏலவார்குழலி

இத்தலத்திற்கு வழங்கும் திருப்பெயர்களில் **திட்டை** என்பதும் ஒன்றும். இதனையே சுந்தரமூர்த்தி சுவாமிகள். **"கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்"** என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் **"கோத்திட்டைக்குடி வீரட்டானம்"** என்றும் கூறியிருக்கின்றனர். திட்டு என்ற சொல் மேடான இடத்தையும், ஆற்றின் இடையே உள்ள சிறு நிலப்பகுதி என்றும் உணர முடிகிறது. ஊரின் தென் எல்லையில் உள்ள விளப்பாறு (ரக்த நதி) என்ற ஒரு ஆறும், வட எல்லையில் உள்ள பில்லாலி ஆறு என்ற ஒரு ஆறும் ஓடுகின்றன. இந்த இரண்டு ஆறுகளுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியே திட்டு என்று முதலில் வழங்கப்பெற்றுப் பின்னர் திட்டை என்று வழங்கப்பெருவதாயிற்று. ''கோ'' என்ற சொல் தலைமை, முதன்மை என்ற பொருள்களைத் தருவதால் திட்டை என்ற சொல்லின் முன்னே ''கோ'' என்ற சொல்லையும் சேர்த்துக் கோத்திட்டை என வழக்கத்திற்கு வந்தது. இரண்டு ஆறுகளுக்கும் இடையே உள்ள சிறந்த முதன்மையான நிலப்பகுதி என்ற பொருளைத் தருவதே ''கோத்திட்டை'' என்பதாகும்.

ஊரின் நான்கு பக்கங்களிலும் பசுமை நிரம்பிய நெல் வயல்கள் பரவியுள்ளன. தென்னை, மா, பலா முதலிய மரங்கள் வளர்ந்து வனப்பூட்டுகின்றது. மல்லிகை, முல்லை போன்ற கொடிகள் மலிந்த பூஞ்சோலைகள் எப்பொழுதும் நறுமணம் தந்து கொண்டிருக்கின்றன. இத்தனை எழில்மிக்க இயற்கை வளங்கள் பொருந்திய திருவிற்குடி வீரட்டானத்தை இயற்கை அன்னையின் எழில்பூங்கோயில் என்று சொன்னால் அது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

இத்தலத்தில் சுமார் நூறு வீடுகள் இருக்கின்றன. இங்கே 3000க்கும் குறையாத மக்கள் தொகை உண்டு. ஊரின் நலத்தைப் பேணிக் காக்க ஊராட்சி மன்றமும், கோயில் அறங்காவலர்களால் நடத்தப்பெறும் இலவசத் தொடக்கப் பள்ளியும் இருக்கின்றன. தொடக்கப் பள்ளியின் கிழக்கே அஞ்சலகமும் அமைந்துள்ளது.

மூர்த்தி :

இங்கு கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் மூர்த்திகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு, இந்தக் கோவிலைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமல்லவா? ஊரின்

நடுவே மேற்கு நோக்கி அமைந்துள்ளது இந்தத் திருகோயில். தென்னாட்டில் உள்ள வீரட்டானத் தலங்கள் எட்டில் திருவழுவூர், திருவதிகை என்ற இரண்டு தலங்களில் அமைந்துள்ள கோயில்கள் கிழக்கு நோக்கியே இருக்கின்றன. ஏனைய திருக்கண்டியூர், திருகோவலூர், திருப்பறியலூர், திருவிற்குடி, திருக்குறுக்கை, திருக்கடவூர் ஆகிய ஆறு தலங்களில் உள்ள திருக்கோயில்கள் மேற்கு திசை நோக்கியே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தெற்குவடக்கு வீதிகள் நீண்டும், கிழக்கு மேற்கு வீதிகள் குறுகியும் அமைந்துள்ளன. ஆலயம் கிழக்கு மேற்கில் நீளம் 302 அடியும் தெற்கு வடக்கில் அகலம் 151 அடியாகவும் அமையப்பெற்றுள்ளது. ஆலயத்தை அடுத்து சுமார் 40 அடி அகலத்தில் இரண்டாவது பிரகாரம் அமைந்துள்ளது. தெருவுக்கும் இரண்டாவது பிரகாரத்திற்கும் இடையே நான்கு பக்கங்களிலும் இரும்புக் கம்பிகளால் வேலி கட்டி அதன் உட்புறத்தில் தென்னை மரங்களும், அலரிச் செடிகளும் அமைந்திருப்பது மிக்க அழகினைத் தருகிறது. ஆலயத்தின் முன்புறம் சுமார் 200 அடி உயரத்தில் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த கோபுரம் இருக்கிறது. ஏனைய பிற மூன்று பக்கங்களிலும் கோபுரங்கள் இல்லை.

கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றவுடன் இடது கைப் புறமாகத் தெற்கு நோக்கியிருக்கும் **ஏலவார் குழல் அம்மையின்** சந்நிதியைக் காணலாம். அதற்கு அடுத்துக் கிழக்கே **ஸ்ரீவீரட்டானேஸ்வரர்** சந்நிதியில் கொடிமரம், பலிபீடம், நந்தி முதலியன அமைந்திருக்கின்றன. இவற்றிற்குக் கிழக்காக மூன்று அடி உயரத்தில் மகா மண்டபம் இருக்கிறது. அர்த்த மண்டபம் அதற்கு அடுத்தபடியாக அமைந்துள்ளது. அந்த மண்டபத்தை அடுத்து ஸ்ரீ வீரட்டனேஸ்வரர் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். ஏலவார் குழல் அம்மையின் கோயிலை அடுத்து வடக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கி சம்காரமூர்த்தி உற்சவராகக் காட்சி தருகிறார். அடுத்தபடி கிழக்காக பள்ளியறையும் வாகன அறைகளும் அமைந்துள்ளன.

கிழக்குப் பிரகாரத்தின் வடகோடியில் நவக்கிரகங்களின் சந்நிதி இருக்கின்றது. இதனையடுத்து சூரியன் சந்நிதியும், யாகசாலையும் அமைந்துள்ளன. அடுத்தபடியாக மூன்று அறைகள் உள்ளன. இவற்றையடுத்து சந்திரன் சந்நிதியும் மடைப்பள்ளியும் இருக்கின்றன.



சுப்பிரமணியர்



சோமாஸ் கந்தர்

தெற்குப் பிரகாரத்தின் கிழ்க்கோடியில் ஞான தீர்த்தம் கிணறாக அமைந்துள்ளது. மேற்கோடியில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார் திருவுருவங்கள் அமைந்துள்ளன. மேற்குப் பிரகாரத்தின் தென்கோடியில் பிரதான விநாயகர் சன்நிதி உள்ளது. கோபுரத்தை அடுத்து சோமாஸ்கந்தர் உற்சவராக உள்ள பஞ்சமூர்த்திகள் சந்நிதியில் இருக்கிறது.

ஏலவார் குழல் அம்மையின் கோயிலுக்கு மேற்புரமாகக் கிழக்கு நோக்கி இலக்குமியின் சந்நிதியும், சுப்பிரமணியர் சந்நிதியும் அமைந்துள்ளன. வடக்குப் பிரகாரத்தின் கீழ்க்கோடியில் உள்ள பைரவர் சந்நிதியின் வலது புறத்தில் சனிபகவானின் தனித் திருவுருவம் ஒன்றும் அமைக்கப் பெற்றுள்ளது. தென் புறத்தில் பைரவர் உருவமும், இவற்றிற்கு எதிரே ஒரு மகாலிங்கத் திருவுருவமும் அமைந்துள்ளன. வீரட்டான ஈஸ்வரர் ஆலயத்தின் வடபுறத்தில் துர்க்கை, சண்டிகேஸ்வரர் திருவுருவங்கள் காட்சி தருகின்றன. கர்ப்பக் கிருஹத்தின் வடபுறத்தில் பிரம்மாவின் திருவுருவமும், கீழ்பாகத்தில் மகா விஷ்ணுவின் திருமேனியும், அமைந்துள்ளன. வீரட்டான ஈஸ்வர் ஆலயத்தின் தென்பகுதியில் கீழ்பாக்கமாக தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவமும் மேற்கே நர்த்தன விநாயகரின் திருவுருவமும் காட்சி தருகின்றன.

தெற்குப் பிரகாரத்தில் உள்ள ஞான தீர்த்தத்தின் மேற்குப்புறமாக வடக்கு நோக்கிய பிடாரியின் திருவுருவமும், கிழக்கு நோக்கிய மாரியம்மன் திருவுருவமும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப் பிரகாரத்திலேயே மகா மண்டபத்தை அடுத்து தூண் ஒன்றில் ஆஞ்சனேயரின் திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தை ஒட்டி மகா மண்டபத்தின் இரு பக்கங்களிலும் துவார பாலகர்களின் திருவுருவங்கள் அமைந்துள்ளன். வாயிலின் வலது புறமாக வள்ளி தெய்வானை உடனுய முருகப் பெருமானின் திருவுருவமும் இடது புறமாக விநாயகரின் திருவுருவமும் அமைந்துள்ளன.

அர்த்த மண்டபத்தில் மேற்கு நோக்கி நடராஜப் பெருமானின் திருவுருவம் அமைகப்பெற்றுள்ளது.

நடராஜருக்கு இடது புறத்தில் சிவகாமி அம்மனின் திருவுருவமும், பிக்ஷாடனர் உருவமும், சிறிய சுப்பிரமணியர் உருவமும் உற்சவராகக் காட்சி தருகின்றனர். மேற்கு நோக்கி பிரதோஷ விநாயகர் வீற்றிருக்கிறார். வலது கைப் புறத்தில்

மாணிக்கவாச சுவாமிகள், ஆடிப்பூர அம்மன், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளின் திருவுருவங்கள் உற்சவராக அமைந்துள்ளன.

இத்தலத்தின் மூர்த்தியின் பெயர் **ஸ்ரீ வீரட்டானஈஸ்வரர்.** வீரத்தானம் என்பது பிற்காலத்தில் வீரட்டானம் எனத் திரிந்திருக்கலாம், வீரத்தானம் என்பது வீரச் செயல்கள் புரிந்த இடம் என்று பொருள்படும். சலந்தரன் என்ற அசுரனை சம்காரம் செய்த வீரச்செயல் புரிந்த இடம் இது என்பதால் இப்பெயர் அமைவதே பொருத்த முடையது. கண்டியூர் முதலிய தலங்களிலும் இறைவன் வீரச்செயல்கள் செய்திருக்கின்றார். ஆதலால் அவைகளும் வீரட்டானங்கள் என்றே அழைக்கப் பெறுகின்றன. வீராட்டானம் என்ற சொல்லே வீரட்டம் எனப் பேச்சுவழக்கில் மருவியிருக்க வேண்டும். சலந்தராரி, வீரட்டேசுவரர் என்று மறுபெயர்களும் மூர்த்திக்கு வழங்கப் பெருகின்றன்.

இத்தல அம்பிகையின் பெயர் ஏலவார் குழலி என்பதே. ஏலம் என்பது பெண்கள் கூந்தலுக்கு அணியும் மயிர்ச்சாந்து எனப் பொருள்படும். எனவே மயிர்ச்சாந்து அணிந்த நீண்ட கூந்தலை உடையவள் என்பதே இத்தொடரின் பொருள். மைவார் குழலி, பரிமாள நாயகி என வழங்கும் பெயர்களும் இப்பொருளையே சுட்டுகின்றன. அம்பிகையின் வலது திருக்கரங் களில் மேல் கரத்தில் ஜபமாலை இருக்க மற்றொரு கரம் அபயாஸ் தமாக இருக்கிறது. இடது திருக்கரங்களில் மேற்கரம் தாமரை மலரை ஏந்தி நிற்க மற்றொன்று தொடையில் அமைந்திருக்கின்றது.

இக்கோயிலின் பலபகுதிகளில் விநாயகப் பெருமானுக்குத் திருவுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. தக்ஷிணாமூர்த்தியை அடுத்து எழுந்தருளியுள்ள விநாயகரை நர்த்தன விநாயகர் என்று அழைக்கப்பெறுகிறார். பண்டரங்கம் முதலிய கூத்துகளை இறைவன் ஆடுவது போலவே மூத்த பிள்ளையாரும் கூத்தாடுவது இயற்கை. தன் தந்தையார் அன்று சலந்தரனைக் கொன்ற வீரச் செயலைக் கண்டு மகிழ்ந்தே கூத்தாடியிருக்க வேண்டும் என்பதால் நர்த்தன விநாயகர் என்று பெயர் பெற்றார் என்றே கருதத் தோன்றுகிறது. அர்த்த மண்டபத்திற்கு முன்னே இடது கைப்புறமாக வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்குப் பெயர் அனுக்ஞை விநாயகர் என்பதே. திருக்கோயிலின் விழாக்கள் முதலியன நிகழும் போது இப் பெருமானிடம் கட்டளை பெற்று மறுநிகழ்ச்சிகளைத் தொடங்கும்

சங்க தீர்த்தம்

சக்கர தீர்த்தம்

சங்கார மூர்த்தி

வழக்கம் உள்ளதால் இப்பெருமானுக்கு இந்தப் பெயர் அமைந்தது என்பதை கருத வேண்டி இருக்கிறது. செல்வ விநாயகர் சங்க தீர்த்தக் கீழ்ககரையில் காட்சி தருகிறுர்.

சிக்கலுக்குச் சிங்கார வேலர் ஏற்றமளிப்பது போலவும், வைத்தீஸ்வரன் கோயிலுக்கு முத்துக்குமார சுவாமி உயர்வு அளிப்பது போலவும் இத்தலத்தில் உற்சவராக உள்ள சங்கார மூர்த்தி காட்சி தருகிறுர், இடது கரம் ஒன்றில் மான் கன்றைத் தாங்கி, மற்ருெரு இடது கரத்தால் முத்திரை கொடுத்து, வலது கரம் ஒன்றில் சக்கரமும், மற்ருென்றில் மழுவும் ஏந்தி, நின்ற கோலத்தில் காட்சி தருகிறுர், வலது கரத்தால் சின்முத்திரை தரும் பெருமான் சலந்தரனைச் சங்கரிக்கும் வீரச் செயலைத் தொடங்கிய போது முத்திரை காட்டும் செயலை இடது கரத்திற்குத் தந்திருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது. வீரச் செயல் செய்வதற்கு அறிகுறியாக வலக்கரங்களில் சக்கரம், மழு என்ற ஆயுதங்கள் அலங்கரிக்கின்றன.

தீர்த்தம்

ஆலயத்தின் உள்பக்கம் தென்கிழக்கு மூலையில் ஞான தீர்த்தம் கிணருக அமைந்துள்ளது. இத்தீர்த்தம் கல்லாலின் கீழ் அமர்ந்து நான்மறை, வேதாங்கம் முதலியவற்றை ஓதியுணர்த்தும் உண்மை ஞானத்தை பெருமல் மயங்கி நின்ற சனகாதி முனிவர்களுக்கு உண்மை ஞானத்தை இருந்தபடி இருந்து ஞான முத்திரையால் உணர்த்திய தட்க்ஷிணுமூர்த்தியின் திருமுன்னர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. இதில் மூழ்கியவர்கள் அறிவு மயக்கம் நீங்கி, தெளிந்து, உண்மை ஞானம்பெற்று இம்மை மறுமைப் பேறுகளைப் பெறுவார்கள். திருக்கோயிலின் முன்புறம் அமைந் திருப்பது சங்க தீர்த்தம். சங்க தீர்த்தத்திற்கும் இரும்பு வேலியிடப் பெற்றுளது. இரண்டாவது பிரகாரத்திற்கும் இடையே இலவ மரங்கள் வரிசையாகப் பசுமை தவழ உயர்ந்து நிற்கும் காட்சி பார்ப்பவர்கள் மனதைப் பரவசப்படுத்தும். இந்த தீர்த்தத்தின் கிழ்க்கரையில் தென்புறமாகக் கோயிலை நோக்கிய தனி விநாயகர் ஆலயமும் அமைந்துள்ளது. சங்க தீர்த்தம் நான்கு பக்கங்களிலும் கருங்கல் சுவர்களைக் கொண்டும், படித்துறைகள் அமைந்தும் காணப்பெறுகின்றது. கடுங் கோடையிலும் நீர் வற்ருதபடி குளம் அகழப்பெற்றுள்ளது. இரண்டாவது பிரகாரத்தில் வாயு மூலையில் ஒரு கிணறு அமைந்துள்ளது. கோயிலின் கீழ்புறத்தே

சக்கர தீர்த்தம் இருக்கிறது. ஆலயத்தின் முன்புறம் அமைந்துள்ளது சங்க தீர்த்தம். இது அட்ட குளம் என்றும் வழங்கப்பெறுகிறது. ஆலயத்தின் பின்புறம் திருமயானேஸ்வரர் கோயிலுக்கு முன்பாக சக்கரதீர்த்தம் அமைந்துள்ளது, திருமாலின் கையில் உள்ளனவாகிய சங்கு, சக்கரம் என்பனவற்றை பெயராகக் கொண்டு இத்தீர்த்தங்கள் அமைந்திருப்பது எண்ணிப்பார்க்க வேண்டிய தொன்று. ஊரின் தென்பக்கம் ஓடும் விளப்பாறும், வடபக்கம் ஓடும் பில்லாலி ஆறும் தீர்த்தங்களே. விளப்பாறு ரக்த நதி என்ற பெயரால் அழைக்கப் பெறுகின்றது. சலந்தராசுரனது உடல் சக்கரத்தில் பிளப்புண்ட போது உதிரம் ஆறுகப் பெருகியதை நினைவு கூறவே இந்தப் பெயர் வந்திருக்கக் கூடும்.

தலவிருட்சம்

இத்தலத்திற்கு உரிய தலவிருட்சம் துளசி எனச் சொல்லப் பெறுகிறது. ஆனல் ஆலயத்தின் கீழ்புறம் திருமயானேஸ்வரர் கோயிலே அடுத்து ஒரு பெரிய அரசமரம் இருக்கிறது, திருமயான ஈஸ்வரர் ஆலயத்திற்கு வடபுறமாக பிருந்தாவனம் என்ற பெயரோடு துளசிமேடை அமைந்துள்ளது.

சுற்றுக்கோயில்கள்

ஆலயத்தின் முன்புறம் உள்ள சங்க தீர்த்தத்தின் தென் மேற்கு மூலேயில் வீதிகளே அடுத்து ஐயனர் கோயில் ஒன்று அமைந் துள்ளது, இந்த ஐயனர் சொக்கநாதர் என்று அழைக்கப் பெறுகின்றார். பக்தர்கள் இப்பெருமானை மிகுதியாகக் கொண்டாடி வழிபடுகின்றனர். ஐயனர் ஊருக்குக் காவல் தெய்வம். ஆதலால் மக்கள் அவர் அருளை வேண்டி வழிபடுகின்றனர், அவரும் அருள் பாலித்து வருகிறார். சில இடங்களில் இருப்பது போல ஆலயம் கட்டடமாக இல்லாமல் கொட்டகையாகவே இருக்கிறது. மிகப் பெரியதும், பழமை வாய்ந்ததுமான நருளி மரம் ஒன்று இவ்விடத்தில் இருகிக்கிறது.

வீரட்டானேஸ்வரர் ஆலயத்தின் கீழ்புறத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதியோடு திருமயானேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. அது திருமெஞ்ஞானேஸ்வரர் ஆலயம் என்றே மக்களால் அழைக்கப் பெறுகின்றது. அட்டவீரட்டான தலங்களே நோக்கும் போது ஒவ்வொன்றின் பக்கத்திலும் திருமயானேஸ்வரர் ஆலயமும் அமைந்

திருப்பதை அறிய முடிகிறது. ''காழி மயானம்,'' வீழி மயானம், கடவூர் மயானம் என்ற தொடர்கள் வழக்கில் உள்ளதை பார்க்கும் போது வீரட்டானங்கள் அல்லாத தலங்களை அடுத்தும் சில இடங்களில் திருமயானேஸ்வரர் ஆலயம் அமைந்திருப்பதை உணரலாம். திருக்கடவூர் அட்டவீரட்டானங்களில் ஒன்றாகும். கடவூர் மயானம் திருஞான சம்பந்த சுவாமிகளாலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப்பெற்ற தனிப்பதிகங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்படி மயானேஸ்வரர் ஆலயங்கள் அமைந் திருப்பதை நோக்கும் போது சர்வ சங்கார காலத்தில் உலகமே மயானமாகக் காட்சியளிக்க, இறைவன் ஒருவனே ஏகனாகி நின்று அந்தத்தைச் செய்த அவனே அனைத்திற்கும் ஆதியாகி இருந்து சர்வ சிருஷ்டிகளையும் செய்வான் என்பது புலனாகின்றது. அட்டவீரட்டா னங்களிலும் இறைவன் ஒவ்வொரு சிறு சங்காரத்தைச் செய் திருப்பதால் அவ்விடங்களும் சிறு மயானமே என்பதை உணர்த் தவே அவற்றை அடுத்து இப்படி மயானேஸ்வரர் ஆலயங்கள் அமைந் துள்ளன என்றே கருத வேண்டியிருக்கிறது. இத்தலத்தில் சலந்தரன் என்ற அசுரனைச் சங்கரித்த மூர்த்தியே மயானேஸ்வரர் என்று பெயர் தாங்கி சங்கரித்த அந்த இடத்திலேயே தனிக்கோயில் கொண்டு காட்சி தருகிறார். வீரட்டானேஸ்வரர் தலத்திற்கு ஆதிமூர்த்தி, மயானேஸ்வரர், சங்கார அவசரத்தில் காட்சியளித்தவர்.

இதுகாறும் தலம், தீர்த்தம், மூர்த்தி, தலவிருட்சம் முதலிய வற்றை பார்த்த நாம் இனி வரும் பகுதிகளில் புராண வரலாறு முதலியவற்றையும் காணலாம்.

புராண வரலாறு

இத்தலத்திற்கு வரலாறு வடமொழியிலோ அல்லது தமிழிலோ தனியாக அமையவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. சலந்தராசுரனைக் கொன்ற ஒரு செயலே இத்தலத்திற்குத் தனிப் பெருமை அளிக்கின்றது. சலந்தராசுரன் வதம் பற்றிப் பத்ம புராணம், கந்தபுராணம் முதலியன பொதுவாகக் கூறுகின்றன.

சிவத்தலங்களுக் கெல்லாம் வடமொழியிலும் தமிழிலும் தல புராணங்க அமைந்திருப்பது போல இத்தலத்திற்குப் புராணங்கள் அமையவில்லை. சலந்தராசுர வதம் நிகழ்ந்த காரணத் தால் இது அட்டவீரட்டானங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்திரன்-திருமால்-பிரமன் முதலியவர்கள் இங்கே அருள்பெற்றது இத்தலத்தின் சிறப்பிற்குரிய செய்தியாகும். இத்தலத்தை அடுத்து

சொரக்குடி என்ற ஊர் இருக்கிறது. சலந்தரனுக்கு அஞ்சிய சுரர் வந்து குடிபுகுந்து இடம் முதலில் சுரர்குடி என்று வழங்கப்பெற்று காலப்போக்கில் சொரக்குடி எனத் திரிந்திருக்கலாம் அதன் பக்கத்திலேயே கங்களாஞ்சேரி என்ற சிற்றூர் இருக்கிறது. கங்காளன் என்ற பெயர் சிவபெருமானைக் குறிக்கும். தேவர்கள் வேண்டி நிற்க அவர்களுக்கு அருள்புரிய விரும்பி சிவபெருமானாகிய கங்காளன் வந்து சேர்ந்த இடம் கங்காளன்சேரி. இதுவும் மக்கள் வழக்கில் கங்களாஞ்சேரி என மருவியிருக்கக் கூடும். இத்தலத்தை அடுத்துக் கீழ்பால் வாழ்க்குடி என்ற சிற்றூர் இருக்கின்றது. திருமால் பிருந்தையின்பால் காதல் கொண்டு அவசமுற்ற நிலையில் தன் கையில் உள்ள ஐம்படைகளும் திக்கிற்கு ஒன்றாய் விழுந்த போது வாள் விழுந்த இடம் வாட்குடி என்று முன்னே வழங்கிய பின்னர் வாழ்குடி என்று ஆகியிருக்க வேண்டும். திருமாலின் வில் விழுந்த இடமே விற்குடி என்று வழங்கி வந்திருக்க வேண்டும். கோயிலின் முன் புறமுள்ள சங்கர தீர்த்தமும் பின்புறமுள்ள சக்கர தீர்த்தமும் திருமாலின் ஆயுதங்களான சங்கும், சக்கரமும் விழுந்த இடங்களாக உணர வேண்டியிருக்கிறது.

சலந்தரன் வரலாறு

எல்லாம் வல்ல பரம்பொருள் கைலை மலையில் உமாதேவியாரோடு வீற்றிருந்தார். அப்போது இந்திரன் தானே பெரியவன் என்ற ஆணவத்தோடு சிவபெருமானைத் தெரிசிக்கச் சென்றார். இந்திரன் மனநிலையை உணர்ந்த பரம்பொருள், அவன் ஆணவத்தை அடக்குவதற்காக, ஒரு துவாரபாலகனாக உருமாறி இந்திரன் வரும் வழியில் நின்றுகொண்டிருந்தார். இந்திரன் துவாரபாலகனிடத்தில் தான் இதுசமயம் ஈஸ்வரனைச் சந்திக்க இயலுமா எனக் கேட்டதற்கு சிவபெருமான் எதுவும் பதில் கூறாமல் வாய்மூடி இருந்தார். இதனால் கோபம் கொண்டு இந்திரன் தன் வச்சிராயுதத்தால் அவரைத் தாக்கினார். வச்சிராயுதம் பொடிப்பொடியாய் ஆனது. சிவபெருமான் தன் உருக்கொண்டு கோபத்துடன் தோன்ற, இந்திரன் அஞ்சி அவரடி தொழுது தனது பிழையைப் பொருத்தருளுமாறு வேண்டினார். கருணையே வடிவான பரம்பொருள் அவனைப் பொருத்து அவனுக்குப் படையும் விடையும் கொடுத்து அனுப்பி தனது கோபக்கனலை எடுத்து கடலில் எறிந்துவிட்டு கைலாயம் சென்றடைந்தார்.

கடலில் விழுந்த கோபக்கனல் ஒரு வலிமை மிக்க மகவாகத் தோன்ற அந்த மகவினை வருணன் எடுத்து வளர்த்து வரலாயினர்.

வருணன் தான் வளர்க்கும் அந்தக் குழந்தையை பிரமனிடம் கொடுத்தான். குழந்தையைத் தன் மடிமீது வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த பிரம தேவனின் தாடியைப் பிடித்து இழுத்தது குழந்தை. பிரமன் வலிதாளாமல் கண்ணீர் சிந்த அது குழந்தையின் மேல்பட்டது. எனவே அக்குழந்தைக்கு ஜலந்தரன் எனப் பெயரிட்டுச் சென்றூர். ஜலந்தரன் என்ற சொல்லுக்கு ஜலம் தரித்தவன் என்றும், தண்ணீரால் தாங்கப் பெற்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். பிரமனது கண்ணீரை தன்மீது தரித்ததையும், கடல் நீரால் இவன் தாங்கப் பெற்றதையும் இங்கு உற்று நோக்குதல் வேண்டும்.

பிரமதேவனிடத்தில் வரங்கள் பல பெற்று ஜலந்தரன் பூமிக்கு வந்து அரக்கர்களுடன் சேர்ந்து திக்குவிஜயம் செய்து வெற்றி பெற்ருன். அவுணர்கம்மியனை அழைத்துத் தனக்குத் தக்கதோர் மிகப்பெரிய நகரம் ஒன்றை அமைத்துக் கொண்டு அதற்கு ஜலந்தபுரம் எனப் பெயரிட்டான். அதில் இருந்து அரசோச்சிய ஜலந்தரன், காலநேமி என்ற அவுணன் மகள் பிருந்தையை மணந்து இன்பமாக வாழ்ந்து வந்தான். தன் வரபலத்தாலும், உடல் வலிமையாலும் ஆணவம் கொண்ட சலந்தரன், தேவர்களை எல்லாம் துன்புறுத்தத் தொடங்கினுன். இவன் வருகையைக் கேட்டதும் தேவர்கள் எல்லாம் அஞ்சி ஓடத் தொடங்கி கைலை மலையில் அடைக்கலம் புகுந்தனர். தன் ஒற்றர்கள் மூலம் இதனை அறிந்து மிகக்கோபங் கொண்டு, போர்க்கோலம் தாங்கி கைலைமலையை நோக்கி எழுந்தான். இதனைக் கண்ணுற்ற அவன் மனைவி பிருந்தையும், சிவபெருமானின் பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூறி, கைலை மலையை நோக்கிப் போருக்கு எழக் கூடாது என்று வேண்டி நின்ருள். ஆயினும் என்ன செய்யலாம். ஊழ்வினை சலந்தரனை பிடித்து உந்தக் கைலையை நோக்கிப் புறப்பட்டான். இவன் வருகையை இந்திரன் முதலானோர் பரம்பொருளிடம் சென்று முறையிட்டார்கள். பெருமானும் அபயமளிக்கும் திருக்கரத்தை அமைவுறக் காட்டி அஞ்சவேண்டாம் என அருள் செய்தார். பின்னர் பரம்பொருள் ஒரு கிழ அந்தணராக உருக்கொண்டு சலந்தரன் முன்னே சென்று அவனுடன் பேசலானுர். அவன் தான் கைலைக்குச் செல்லும் எண்ணத்தைக் கூறினுன். அதற்கு அவரும், அவர் கைலைக்குச் செல்வது ஒருபுறம் இருக்கட்டும், தான் சொல்லும் சிறு வேலையைச் செய்ய முடியுமா, என்று கேட்க, ஆணவத்துடன் எதையும் செய்து முடிக்கும் பேராற்றல் தனக்குண்டு என்று கூறினுன்.

உடனே அந்த அந்தணர் தன் கால்ப் பெருவிரலால் மண்ணில் ஒரு வட்டமிட்டு, அந்த வட்டத்தைப் பெயர்த்து எடுத்து அவன் தலைமேல் தாங்க வேண்டும் என்று கூறினார். சலந்தரன் அதைக் கேட்டு சிரித்துவிட்டு அந்த வட்டத்தை அனுயாசமாகப் பெயர்க்கத் தொடங்கினான். ஆனால் அவனால் அது எளிதில் முடியவில்லை. பின்னர் மிகவும் வலிந்து அதனைப் பெயர்த்து தன் இரு கரங்களாலும் உயரத் தூக்கிப் பிடித்து தலைக்குமேல் தாங்கினான். உடனே அது அவன் உடலை இரு கூறுகளாகப் பிளந்து அவனைத் தள்ளிவிட்டு சோதி வடிவமாக இறைவன் திருகரத்தில் சென்று அமர்ந்தது.

கைலை மலையை நோக்கி சென்ற தன் கணவர் விரைவில் திரும்பி வராமையால் பெரும் கவலையுடன் பிருந்தை காத்திருந்தாள். இவளுடைய கற்பு அழிந்தால்தான் சலந்தரன் அழிவான் என்ற சாபம் ஒன்றிருந்ததை அறிந்த திருமாலும், இந்திரன் முதலிய தேவர்களின் வேண்டுகோளுக்காக பிரந்தையின் கற்பை அழிக்க முற்பட்டார். நீண்ட நாட்களாக அன்பு கொண்டவர் போல் பிருந்தையின் முன் ஒரு தவயோகி போல உருக்கொண்டு சென்றார். அவளும் அவரிடம் தன் கணவனைப் பற்றிக் கூறியபோது, சலந்தரனும் இரு கூறாகி இறந்துவிட்டதைக் கூறி அவள் முன் அந்த இரு கூறுகளும் வருமாறு செய்தார். பிருந்தை தன் கணவன் மீண்டும் உயிர் பெற்று வரும்படி அருள் செய்ய வேண்டும் என உருக்கமாக வேண்டினாள் அந்த மாய உருக்கொண்ட திருமாலும், சலந்தரனின் உடற் கூறுகளை ஒன்றாகச் சேர்த்து, தான் அவ்வுடலில் புகுந்து சலந்தரனே மீண்டும் உயிர் பெற்று வந்து விட்டதாக நம்பும்படி செய்தார்.

திருமால் சில நாள் பிருந்தையுடன் இருந்து இன்ப நுகர்ச்சியை அனுபவித்தார். சில நாட்களில் தன்னுடன் வாழ்பவன் மாயக் கணவன் எனபதை உணர்ந்த பிருந்தை மனம் வருந்தி, தீப்புகுந்து உயிர் நீத்தாள். பிருந்தையின் பிரிவால் வருந்திய திருமால் அவள் வெந்து தீயந்த இடத்திலேயே வீழ்ந்து புரள்வதை உணர்ந்த பார்வதி தேவி தனது இடக்கைச் சிறு விரலிலிருந்து ஒரு விதையை உண்டாக்கி சிவபெருமானிடம் கொடுக்க, அவரும் அதை பிரும்மதேவனிடம் கொடுத்தார். பிரம்மதேவனும் அவ்விதையை பிரந்தை இறந்த இடத்தில் வைத்து நீர் வார்க்க அங்கே துளசிச்செடி உண்டாயிற்று. அந்தத் துளசியைத் தன்மேல் அணிந்து மையல் தீர்ந்த திருமால் மீண்டும் தன் பழைய நிலையை அடைந்தார்.

சலந்தராசுர வதம், பத்மபுராணம், கந்தபுராணம் முதலிய நூல்களில் கூறப்பெறுவதால் அவை யாவும் இத்தல வரலாறு கூறுகின்றவை களாகவே அமைகின்றன. இவ்வாறே திருவாசகம், பட்டினத்தார் அருளிச் செய்த கோயில் நான்மணி மாலை (11ம் திருமுறை) முதலிய நூல்களிலும் சலந்தரன் வதம் பற்றிச் செய்திகள் வருகின்றன. திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் ஒரு பதிகமும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் அடைவுத் திருத்தாண்ட கத்தில் இரண்டுபாடல்களும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரத் தில் திருப்பரங்குன்றத் திருப்பதிகத்தில் வைப்பாக வரும் ஒரு பாடலும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத் திருச்சாழலில் ஒன்றும், அருணகிரி நாத சுவாமிகள் திருப்புகழ் ஒன்றும், பெரிய புராணத்தில் திருஞான சம்பந்த சுவாமிகள் வரலாற்றில் சுவாமிகள் விற்குடி மேவியதாக சேக்கிழார் சுவாமி களால் பாடப்பெற்ற பாடல் ஒன்றும் இத்தலத்தின் பெயரும், வரலாறும் அமையப்பெற்ற பாடல்களாக உள்ளன.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம் 2ம் திருமுறை

திருவிற்குடி வீரட்டம்

வடிகொள் மேனியர் வானமா
 மதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சாடயினர்
 கொடியினர் உடைபுலி அதள் ஆர்ப்பர்
விடைய தேனும்எம் மானமர்ந்
 தினிதுறை விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல்
 லார்தமை அருவினை அடையாவே (1)

களங்கொள் கொன்றையும் கதிர்விரி
 மதியமும் கடிகமழ் சடைக்கேற்றி
உளங்கொள் பத்தர்பால் அருளிய
 பெருமையர் பொருகரி உரிபோர்த்து
விளங்கும் மேனியர் எம்பெரு
 மானுறை விற்குடி வீரட்டம்
வளங்கொள் மாமல ரால்நினைந்
 தேத்துவார் வருத்தம் தறியா ரே (2)

கரிய கண்டத்தர் வெளியவெண்
    பொடியணி மார்பினர் வலக்கையில்
எரியர் புன்சடை யிடம்பெறு
    காட்டகத் தாடிய வேடத்தர்
விரியும் மாமலர்ப் பொய்கைசூழ்
    மதுமலி விற்குடி வீரட்டம்
பிரிவி லாதவர் பெருந்தவத்
    தோரெனப் பேணுவ ருலகத்தே (3)

பூதஞ் சேர்ந்திசைப் பாடலர்
    ஆடலர் பொலிதர நலமார்ந்த
பாதஞ் சேர்இணைச் சிலம்பினர்
    கலம்பெறு கடலெழு விடமுண்டார்
வேதம் ஓதிய நாவுடை
    யானிடம் விற்குடி வீரட்டம்
சேரும் நெஞ்சினற் கல்லதுலா
    போபிணி தீவினை கெடுமாறே (4)

கடிய ஏற்றினர் கனலன
    மேனியர் அனலெழ ஊர்மூன்றும்
இடிய மால்வரை கால்வளைத்
    தான்தனது அடியவர் மேலுள்ள
வெடிய வல்வினை விட்டுவிப்
    பானுறை விற்குடி வீரட்டம்
படிய தாகவே பரவுமின்
    பரவினுற் பற்றறும் அருநோயே (5)

பெண்ணோர் கூறினர் பெருமையர்
    சிறுமறிக் கையினர் மெய்யார்ந்த
அண்ணல் அன்புசெய் வாரவர்க்கு
    எளியவர் அரியவர் அல்லார்க்கு
விண்ணில் ஆர்பொழில் மல்கிய
    மலர்விரி விற்குடி வீரட்டம்
எண்ணிலாவிய சிந்தையினுர் தமக்கு
    இடர்கள் வந்து அடையாவே (6)

இடங்கொள் மால்கடல் இலங்கையர்
கோன்தனை இகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரை யானுரை
யார்தரு பொருளினன் இருளார்ந்த
விடங்கொள் மாமிட றுடையவன்
உறைபதி விற்குடி வீரட்டம்
தொடங்கு மாறிசை பாடிநின்
றூர்தமை துன்பநோய் அடையாவே (7)

செங்ண் மாலொடு நான்முகன்
தேடியும் திருவடி அறியாமை
எங்கு மாரெரி யாகிய இறைவனை
யறைபுனல் முடியார்ந்த
வெங்கண் மால்வரைக் கரியுரித்
துகந்தவன் விற்குடி வீரட்டம்
தங்கையால் தொழுது ஏத்த
வல்லாரவர் தவமல்கு குணத்தாரே (8)

பிண்ட முண்டுழல் வார்களும்
பிரிதுவ ராடையர் அவர்வார்த்தை
பண்டும் இன்றுமோர் பொருளெனக்
கருதன்மின் பரிவுறுவீர் கேண்மின்
விண்ட மாமலர்ச் சடையன்
இடமெனில் விற்குடி வீரட்டம்
கண்டு கொண்டடி காதல்
செய்வாரவர் கருத்துறுங் குணத்தாரே (9)

விலங் கலேசிலை யிடமென
உடையவன் விற்குடி வீரட்டம்
திலங்கு சோதியை யெம்பெரு
மான்தனை யெழில்திகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழிற் காழியுள்
ஞானசம்பந்தனற் றமிழ் மாலை
வலங்கொ டேயிசை மொழியுமின்
மொழிந்தக்கால் மற்றது வரமாமே (10)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

அடைவுத் திருத்தாண்டகம்

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம் கடவூர் வீரட்டானம்
காமரு சீரதிகை
மேவிய வீரட்டானம் வழுகை வீரட்டம் வியன்பறியல்
வீரட்டம்விடை யூர்திக்கு இடமாம்
கோவனகர் வீரட்டம் குறுக்கை வீரட்டம் கோத்திட்டைகுடி
வீரட்டானம் இவை கூறி
நாவினவின்று ரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்றமரும் சிவன்றமர் என் றகல்வார்நன்கே (1)

நற்கொடிமேல் விடையுயர்ந்த நம்பன்செம்பங்
குடிநல்லக் குடிநளி நாட்டியத்தான்குடி
கற்குடிதென் களக்குடி செங் காட்டங்குடி
கருந்திட்டைக்குடி கடையக்குடி காணுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே (2)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

திருப்பரங்குன்றம்

கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்
உமைகொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக் குத்தித் தெருவேதிரியும் சிலபூதமும்
நீரும்திசை திசையன
சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழ நும் அரைக்
கோவணத் தொடொரு தோல்புடை சூழ்ந்
தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும் பாம்படி
கேள்உமக் காட்செய அஞ்சுதுமே

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்
திருச்சாழல்

சலமுடைய சலத்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன்று அருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனம்இடந்தான் அடிக்கீழ்
அலராக விடஆழி அருளினன்காண் சாழேலோ

பெரியபுராணம் திருஞான சம்பந்த சுவாமிகள்

புராணம் செ. 497.

சொற்பெரு வேந்தரும் தோணி மூதூர்த்
தோன்றல்பின் காதல் தொடரத்தாமும்
பொற்புகலூர் தொழச் சென்றணைந்தார்
புகலிப்பிரானும் புரிந்த சிந்தை
விற்குடி வீரட்டம் சென்றுமேவி விடையவர்
பாதம் பணிந்து போற்றிப்
பற்பல ஆயிரம் தொண்டரோடும் பாடலுஞன்
மறைபாடிப் போந்தார்

பட்டினத்தடிகள் அருளிச் செய்த கோயில்நான்மணி மாலை

செ 40 (11ம் திருமுறை)

....
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரன் தடிந் தண்டம் போற்றி
....

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

திருவிற்குடித் திருப்புகழ்

தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன — தந்ததான

சித்தி ரத்திலுமி குந்த பொற்பவள
மொத்த மெத்தஅழ குற்ற குத்துமுலை
சிறப சிற்பமயி ரொத்த சிற்றிடைய — வஞ்சிமாதர்

சித்த மந்தனையு முற்ற எப்பகடல்
மெய்த்த சிற்றுமண லுக்கு மெட்டியது
சிக்கு மைக்குழல்கள் கஸ்தூரி பரி — மளங்கள்வீசப்

பத்தி ரத்திலுமி குந்த கட்கயல்கள்
வித்து ருத்தருவ ளைத்த நெற்றிவளை
பற்களைப்பளி ரெனச் சிரித்துமயல் — விஞ்சைபேசிப்

பச்சை ரத்தமயி லைப்பொ லந்தெருவி
லத்தி யொத்தமத மொத்து நிற்பவர்வலை
பட்டுழைத் துகுழியுற்ற அத்தியென — மங்குவேனோ

தத்த னத்தனத் னத்த னத்தனன
தித்தி மித்திமிதி மித்தி மித்திமித
தக்கு டுக்குடுடு டுக்கு டுக்குடென — சங்குபேரி

சத்த முற்றகடல் திக்கு லக்கிரிகள்
நெக்கு விட்டுமுகி லுக்கு சர்ப்பமுடி
சக்கு முக்கிவிட கட்க துட்டசுர — ரங்கமாள

வெற்றி யுற்றகதிர் பத்தி ரத்தையரு
ளிச்சு ரர்க்கதிய திப்ப தத்தையுறு
விந்த ளித்துமதி பெற்ற தந்தைமண — முண்டவேலா

வெட்கிடப் பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லைத்துசிறை வைத்த முத்தர்புகழ்
விற்குடி பதியி லிச்சை யுற்றுமகிழ் — தம்பிரானே

அட்டவீரட்டத்தை விளக்கும் முருகன் திருப்புகழ்

(முருகனடிமை S V. சேதுராமன் அவர்களுக்குக் கனவில் கூறப்பட்ட இறைவாக்கு)

தானந்தன தனத்தன தந்தன தானன
தானந்தன தனத்தன தந்தன தானன
தானந்தன தனத்தன தந்தன தானன — தனதான

வேந்தன்சிர மெடுத்தது கண்டியி லாணவ
மேவந்தகன் வதைத்தது திண்புகழ் கோவலில்
மேலும்புர மெரித்தது நன்றுயர் சீரதி — கையிலேதான்
மீனங்கொடி பிடித்தவ னங்கச னாகிய
காமன்றிகழ் குறுக்கையில் விஞ்சிய மாவலி
வேழம்பட வுரித்ததன் நன்கணி சேவகம் — வழுவூரில்
ஏதந்தழு வு தட்சன்ம சஞ்செய வாவென
நீளன்புட னழைத்திலன் வஞ்சக மாமனோர்
ஈனன்றலை யறுத்தது செந்தண ரோதுப — றியலூரில்
ஏமன்றனை யுதைத்தது நன்கட வூரினில்
வீரம்பெற எதிர்த்தச லந்தரன் மாய்வுர
ஏமஞ்செறி யவிற்குடி யென்ற நலூரினில் — விடலாகும்
மாதந்திர ராக்கர்க ளின்குலம் வேரற
லோகம்புக ழநிக்சிழ கஞ்செயும் ரீதியில்
வானும் பர்கள் நலப்பட இந்தம கோதவி — செயுமீசன்
மாயன்பணி சிறப்புடை சங்கர னாரிரு
காதின்கணின் மறைப் பொருளின் புறவோதிய
வாயின்புக முரைத்திடு பண்புறு வாயிலி — யடி நாயேன்
தாதன்பெரு மதிப்பொடடைந் திடு தாய்குரு
நாதன் றமர் செகத்தினி லென்று மேயாவது
தாரம்பதி பெறற்கரு மைந்தனும் யாவரு — மொருநீயே
தாளம்புய நிகர்த்தது தந்தருள் வாய்மலர்
நீபம் புனைகுறப் பெண்வி ரும்பிய வேலவ
தாபந்தவிர் திறத்திலு யர்ந்திடு வானவர் — பெருமாளே

விற்குடி வேலன் திருப்புகழ்

தனந்தன தானத் தனத்தான,

சலந்தரை கானற் கனல்வானம்
சமைந்திடு காயச் சிறைவீய

நலந்தர வேலுற் றடியேனை
நமன்குறு காமற் பொரவாராய்

சலந்தர ஞாழிக் கரனுன
சலந்தர ஞரிக் கொருபாலா

பிலந்தனில் நேரிற் பெரியோனே
பிருந்தை மயானப் பெருமானே

விற்குடி வேலன் வாழ்த்து

தத்தன தானன தத்தன தானன

நற்றவர் ஞானியர் நட்டவர் நாயகன்
வெற்றிகொள் வேலவன் விற்குடி மேவிய
கொற்றவன் மாபதிக் கொக்கலு கோகுறை
அற்றமி லாரமு தற்புதன் வாழியவே

— முருகனடிமை S. V. சேதுராமன்.

திருப்பணி —

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவன் சகல ஆன்மாக்களும் வீடு பேறடைவதற்கு அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத் திருமேனி கொண்டு பல புண்ணியத் திருத்தலங்களில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். அப்படி வீற்றிருந்தருளும் பெருமானுக்கு ஆகம விதிப்படி ஆலயம் எடுத்து அருச்சிப்பது இந்த உலகம் ஈடேறுவதற்குச் செய்யும் சிறந்த சிவத்தொண்டு ஆகும். செடியின் வேர்ப்பாகத்தில் இடும் நீர் மேற்பாகத்திற்குச் சென்று இலை, பூ, காய் கனிகளைத் தருவதுபோல் இறைவனுக்குச் செய்யும் ஆராதனைகள் அனைத்தும் உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கு இன்பம் தருவதற்கு உரிய செயலாகின்றன. இதனால்தான் ஊர்கள்

தோறும் ஆலயங்கள் அமையவேண்டும் என ஆன்றோர்கள் கூறினர். அப்படி ஆலயங்களும், மூர்த்திகளும் இல்லாத ஊரை காடு, அடவி என்றார்கள். ஆலயங்களில் நிகழவேண்டிய நித்திய நிமித்திகங்கள் தடைபடுவதால் நாடு பலதுறைகளிலும் கெடும் என்பதை

''முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே''

என்று திருமூலர் கூறியதை இங்கு கவனிக்க வேண்டும். அறுபத்தி மூன்று நாயன்மார்களில், காரி நாயனார், பூசலார், காடவர்கோன், வாயிலார், கோச்செங்கட் சோழர், சண்டேசுர நாயனார் ஆகிய பெருமக்கள் திருக்கோயில்கள் எடுப்பதையே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு, திருக்கோயில்கள் அமைத்து வழிபட்டுப் பெரும்பதம் பெற்றார்கள்.

நமது தமிழகத்தில் ஆலயங்கள் அமைந்த வரலாற்றை பார்க்கும்போது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல தெய்வங்களுக்கும் ஆலயங்கள் எடுக்கப் பெற்ற செய்தி புலனாகிறது. எந்த உருவில் நாம் எப்பெயர் இட்டு வழிபடினும், அந்த உருவில் ஏகநாயகனாகிய இறைவன் தோன்றி அருள் பாலிக்கிறான் என்பது சாத்திரச் சான்று

''யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வ மாகிஆங்கே
மாதொரு பாகனார் தாம்வருவார்......... ''

என்பது சித்தியார் வாக்கு.

சிலப்பதிகாரத்தில்,

'' அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில்
உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக் கோட்டம்......... ''

என்ற கோயில்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததாக இளங்கோவடிகள் கூறுகின்றார். இவற்றுள் ஊர்க்கோட்டம் என்பது சிவபெருமான் எழுந்தருவியிருக்கின்ற கோயிலை உணர்த்துகின்றது. ''சுடுமண் ஓங்கிய நெடுநிலை மாடம்'' என்ற தொடரை நோக்கும்போது அக்காலங்களில் அமைத்த ஆலயங்கள் அனைத்தும் சுட்ட செங்கற்களால்தான் கட்டப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. நெடுங்காலமாக அப்படிப்பட்ட ஆலயங்களுக்கு ''மண்தளிகள்'' எனப்பெயர் வழங்கப்பெற்றன. இன்றும் திருவாரூரில் கிழக்கு வீதியில் தனித்தலமாய் அமைந்துள்ள தூவாயார் கோயில் பரவையுள் மண்டளி என்றே வழங்கப்பெற்று வருவதை உற்று நோக்குக.

இங்ஙனம் சோழ நாட்டிலும் பிற இடங்களிலும் அமைந்த ஆலயங்களை எல்லாம் சுமார் கி.பி. 6ம் நூற்றாண்டு தொடங்கி கற்றளிகளாகப் புதுப்பிக்கும் பணியினைப் பெரும் வேந்தர்கள் மேற்கொண்டனர். கருங்கல் கொண்டு ஆலயங்கள் அமைப்பதை முதன் முதலில் பல்லவ, பாண்டிய மன்னர்கள் மேற்கொண்டனர். பின்னர் சோழர்குலப்பெரு வேந்தர்களும் கருங்கல் ஆலயங்களையே அமைப்பாராயினர். கி.பி. 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த ராஜராஜ சோழன் தஞ்சையில் பெருவுடையார் கோயிலை அமைத்திருப்பது இன்றுள்ள உலக அதிசயங்களில் ஒன்றெனத் திகழ்வதை நாம் அறிவோம்.

மூவேந்தர் ஆட்சிக்குப்பிறகு இத்தகைய சிவப்பணி குறையலாயிற்று. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் நாட்டுப் பெருங்கோயில்களுக்கு புத்துயிர் அளிக்கத் தனவணிகர் குலத்துப் பெருமக்கள் 'முற்பட்டனர். எங்கெங்கே பாடல்பெற்ற தலங்கள் காணப்படுகின்றதோ அங்கங்கே அவர்கள் எண்ணம் வைக்கத் தொடங்கினர். கேட்பாரற்றுக் கிடந்த ஆலயங்கள் எல்லாம் கைலாயம் எனத்திகழத் தொடங்கின. இத்தகைய பெருமைவாய்ந்த தனவணிகர் குலத்தில் தோன்றிய ஒரு பெரும் குடும்பத்தினர், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் உள்ள பள்ளத்தூர் சொ. மு. அ. மெய்யப்ப செட்டியார் குடும்பத்தார் ஆவர். இவர்களே பழம் பெருமை வாய்ந்த விற்குடி வீரட்டானேஸ்வரர் ஆலயத்திருப்பணியில் ஈடுபட்டு பல லட்ச ரூபாய்களை செலவு செய்து, விற்குடியைப் பல துறை களிலும் விளக்கமுறச் செய்தவர்கள். இந்த திருப்பணி கி.பி. 1917ல் தொடங்கப்பெற்று 1931ல் நிறைவுற்று பிரஜோர்பத்தி ஆண்டு

சித்திரைத் திங்கள் 17ம் நாள் (30-4-1931) குருவாரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அந்தக் குடும்பத்திலிருந்து வந்த சொ. மு. அ. மெ. ராம. ராமசாமி செட்டியார் அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரால் நியமிக்கப்பெற்று ஏக டிரஸ்டியாகவும் சொ. மு. அ. மெ. அரு. ராமசாமி செட்டியார் என்ற நடேசன் செட்டியார் அவர்கள் ஆலயத்திருப்பணி தர்மகர்த்தாவாகவும் இருந்து ஆலயத்தை செம்மையான முறையில் தோற்றுவித்து பரிபாலித்து வந்தனர். கோயிலின் சுற்றுச் சுவர்களும் மண்டபங்களும் பிறவும் சிறந்த கருங்கல் திருப்பணியாகவே அமைந்துள்ளன. விமானங்களும் கோபுரங்களும் சிற்பத்திறத்துடன் காட்சி தருகின்றன. நீண்டகாலம் பழுதடையாதவாறு வலிமையாக ஆலயம் அமைக்கப் பெற்றுள்ளது.

கல்யாணி இருப்பிலிருந்து விற்குடிக்கு இக்குடும்பத்தாரே சுமார் ஒரு மீட்டர் நீளத்தில் சாலை அமைத்து இரு மருங்கிலும் தென்னை மரங்களை வளர்த்து வழிப் போக்கர்களுக்குப் பேருதவி புரிந்துள்ளனர். விளப்பாறைத் தாண்டி ஊரை அடைவதற்குப் பல ஆயிரம் ரூபாய் செலவில் சிறந்ததொரு பாலம் அமைத்துக் கொடுத்தவர்களும் இந்தக் குடும்பத்தினரே.

தமிழகத்தில் உள்ள பழமையான பதிகளின் பெயர்கள் இடைக்காலத்தில் பலகாரணங்களால் மறைந்து போகும் நிலை வந்து விட்டது. அப்படியே விற்குடியின் பெயரும் சிந்தனையை விட்டு மாறிவிட்டது. விற்குடிக்குப் புகைவண்டி நிலையும் அமைத்த அந்த நாள் S. I. R. 2ம் கம்பெனியார் விற்குடி எனப் பெயரிடாது "வெட்டாறு" எனப் பெயர் அமைந்தனர். இந்தத் திருப்பணிக் குடும்பத்தாரின் பெருமுயற்சியால் புகைவண்டி நிலயத்திற்கு விற்குடி என்ற பெயர் நிலைபெறுவதாயிற்று.

இந்தக் கோயில் திருப்பணி நடந்த சமயத்தில் இந்தக் கோயிலுக்காகப் பசுமடத்தை பள்ளத்தூர் ந. மு. சொ. குடும்பத்தினரும், கோயிலுக்கு முன்புள்ள திருக்குளத்தை பள்ளத்தூர் அ. ராம. தெ குடும்பத்தினரும் பள்ளத்தூர் அ. ராம. அழ குடும்பத்தினரும், கோயிலுக்குப் பின்புறமுள்ள திருக்குளத்தை கானாடு காத்தான் மு. ராம. சிட்டாள் ஆச்சியும், நந்தவனத்தை பள்ளத்தூர் மு. அ. சு. குடும்பத்தினரும், ஊருணிக்கரைப் பிள்ளையார் கோயிலை நாட்டரசன்கோட்டை மா. கண. குடும்பத்தினரும் மிகப் பெரும் பொருள் செலவில் ஆக்கித் தந்த பெருமைக்குடையவர்கள் ஆகிறார்கள்.

தின வழிபாடுகளும், ஏனைய விழாக்களும்

காலை	6 மணிக்கு	...	திருவனந்தல்
காலை	9 மணிக்கு	...	கால சந்தி
பகல்	12 மணிக்கு	...	உச்சிக் காலம்
மாலை	6 மணிக்கு	...	சாயரக்ஷை
இரவு	8 மணிக்கு	...	அர்த்த ஜாமம்

என்ற அளவில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் வருகின்ற நவராத்திரி விழாவும் பத்தாவது நாள் விஜயதசமி அன்று அம்புபோடுவதற்கு இறைவனை எழுந்தருளச் செய்து கோயிலைச் சுற்றி வலம் வருதல் உண்டு.

மார்கழி மாதம் தோறும் வருகின்ற ஆருத்ரா தெரிசனத்திற்கும் சுவாமி புறப்பாடு உண்டு.

இது தவிர மாதந்தோறும் வருகின்ற கார்த்திகை, பிரதோஷம், சதுர்த்தி முதலிய தினங்களில் சுவாமி பிறப்பிட்டு கோயிலின் உட்பிரகாரத்தில் வலம் வருவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப் பெற்ற இந்தக் கோயிலை இந்தக் குடும்பத்தின் வழித் தோன்றல் களாகிய மெ. சொ. மெ. மெய்யப்பன், மெ. அரு. ராம. மெய்யப்பன், மெ. ராம. சோ. ராமையா, மெ. மு. மெ. சோலையப்பன் முதலிய நான்கு குடும்பத்தினரும் சேர்ந்து மீண்டும் புதுப்பித்து மூர்த்திகளுக் கெல்லாம் மருந்து சாத்தி கும்பாபிஷேகம் நடைபெறுவதின் நினைவாக இந்த நூல் வெளியிடப்பெறுகிறது.

இந்த நேரத்தில் பரணீதரன் அவர்கள் ஆனந்தவிகடன் 28-4-1985, 5-5-1985 இரண்டு இதழ்களில் எழுதிய ''திருத்தலப் பெருமை'' என்ற கட்டுரையில் விற்குடி பற்றிய செய்திகளை மிக விரிவாகவும் விளக்கமாகவும் படங்களுடன் வெளியிட்டிருப்பது இத்தலத்திற்கு இன்னும் பெருமை சேர்க்கின்றது,

ஆலய அமைப்புப் பட விளக்கம்

1 கோபுர வாயில்
2 மகா லெட்சுமி
3 சுப்பிரமணியர்
4 ஸ்ரீ ஏலவார் குழல் அம்மை
5 சங்கார மூர்த்தி
6 பள்ளியறை
7 வாகனங்கள்
8 பைரவ சந்நிதி
9 பைரவர்
10 சனீஸ்வரர்
11 மகாலிங்கம்
12 நவக்கிரகங்கள்
13 சூரியன்
14 யாகசாலை
15, 16, 17 அறைகள்
18 சந்திரன்
19 மடைப்பள்ளி
20 ஞான தீர்த்தம்
21 பிடாரி
22 மாரியம்மன்
23 தட்சிணாமூர்த்தி
24 நர்த்தன விநாயகர்
25 ஸ்ரீவீரட்டானேஸ்வரர்
26 விஷ்ணுமூர்த்தி
27 பிரம்மா
28 துர்க்கை
29 சண்டேஸ்வரர்
30 அனுக்ஞை விநாயகர்
31 பிரதோஷ நாயனார்
32 பாலசுப்பிரமணியர்

33 பிக்ஷாடனர்
34 சிவகாமசுந்தரி
35 நடராசர்
36 மாணிக்கவாசகர்
37 சுக்ரவார அம்பாள்
38 சுந்தரமூர்த்தி-உற்சவர்
39 சம்பந்தர் ,,
40 திருநாவுக்கரசர் ,,
41 துவாரபாலகர்
42 வள்ளி தெய்வயானை உடனுறை சுப்பிரமணியர்
43 துவாரபாலகர்
44 விநாயகர்
45 ஆஞ்சனேயர்
46 திருஞானசம்பந்தர்
47 திருநாவுக்கரசர்
48 சுந்தரமூர்த்தி
49 மாணிக்கவாசகர்
50 சேக்கிழார்
51 பிரதான விநாயகர்
52 சோமாஸ்கந்தரும் பஞ்சமூர்த்திகளும் உற்சவர்
53 கொடி மரம்
54 நந்தி
55 கொடிமர விநாயகர்
56 அம்மன் சந்நிதி நந்தி
57 பலிபீடம்
58 2வது பிரகாரம் செல்லும் வழி
59 சங்க தீர்த்தம்
60 தீர்த்தக்கரை விநாயகர்
61 திருமயானேஸ்வரர் ஆலயம் செல்லும் வழி
62 திருமயானேஸ்வரர் ஆலயம்
63 பிருந்தாவனம்
64 சக்கர தீர்த்தம்

ஆலய அமைப்பு - வரைபடம்